# கீறல்

மாதாந்த இலக்கிய இதழ்

இதழ் - 06



வெளியீடு:

மின்னல்
வெளியீட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓர் விதவையின் அவலம்

நிந்தவூர்-முர்சித் (இலக்கியன்)

வெள்ளையாடை!.. கருப்பு அறை!..

ஒரு குவளையில் புன்னகை
அருந்திக் கொண்டிருக்கிறேன்!..

அந்தி மாலை என் வாசலுக்கு
வந்து கொண்டிருக்கிறது!..

சந்திரனுக்கும் சூரியனுக்கும்
திருமணப் பேச்சுவார்த்தை!..

சந்திரன் வந்து கொண்டிருக்கிறாள்
மாப்பிள்ளை பார்ப்பதற்கு!..

சூரியனோ இரவைப்போர்த்க்கொண்டு
சூனிய பயத்தில் படுத்திருக்கிறது!..

வசியக்காரி இவள்!..

வளைத்துப்போட்டு விடுவாள்
ஓர் விழிப்பார்வையால்!..

நாளையும் வருவாள்
நாளை மறுநாளும் வருவாள்

ஐயோ பாவம்!..
வரப்போவதில்லை இந்த மாப்பிள்ளை

கன்னிகழியாத வசியக்காரி- இவள்!
கனவுகளினாலான வயசுக்காரி

வெள்ளையாடை!.. கருப்பு அறை!..
இதுவே இவளின் தொடர் கதை!..



## பார்த்திட வருவார் யாரு ?

- கலைமகள் ஹிதாயா -

ஏழைக்கு இல்லை இன்பம்
இருப்பது யாவுந் துன்பம்
கூழையே கண்டால் இன்பம் !
கொடுமை தான் வறுமைத் துன்பம்
நாளையோர் விடிவை எண்ணி
நலமுடன் வாழ எண்ணும்
வாழை போல் மடியு மிந்த
மாந்தருக் கென்று இன்பம் .?

மாடென உழைத்தே ஈற்றில்
மனத் துயர் மட்டும் மிஞ்சும் !
பாடுகள் பட்டே பின்னால்
பலனது பூ (ஜ் )ஜியம் தான் !
மாடியை நிமிர்ந்து நோக்கும்
மனிதர்கள் இவர்க் ளாலே
மாடிகள் தன்னில் வாழ்வோர்
வதிகிறார் பணத்துக் குள்ளே !

குழு குளுப்பான இல்லம் !
குடித்திட "உயர் ரகங்கள் "
வழு வழுப்பான காரில்
வாழுவர் ,அவர்க்குச்சொர்க்கம்
அழுகையே காணும் ஏழை
அன்னவர்க் இது நரகம்
பழுவான வாழ்க்கைப் பேறு
பார்த்திட வருவார் யாரு ?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




மழையில்லாத ஊரில்
நான் கவிதைக்காரனாயிருந்து
மரணித்துப் போகிறேன்

நான் மரணித்தல் என்பது
போட்டிக்காய் எழுதுகிற
உயிர் தொலைத்த கவிதை போல

மழையானவள் என் காதலி
அவள் இருட்டி சிரித்து வருகிற போது
இதயத்தால் வழிந்தோடுகிற வெள்ளமாய்
கள்ளமில்லாது கவிதை பாயும்

கவிதைகளை விடுத்து
ஏதும் ஏந்தி வராத
எனக்கே உரித்தான தனி மழை
தனிமையின் சிறகுகளை
அகல விரித்து
சிறு பட்டாம் பூச்சியாய்
நர்த்தனமாடும்

இப்போதெல்லாம்
தனியே ஒரு மழை இல்லையென்றானது
சிவப்பு மழை கருப்பு மழை
மீன் மழை மான் மழை
ஆமை மழை பூனை மழையென
மழையுள்ளும் கலப்படம் செய்தவர் யார்

மழையானவள் என்னை மறந்து
ஊருக்குள் மற்றதையெல்லாம்
காதலிப்பதாய் செய்தி.

## பொத்துவில் முஹம்மட் அஸ்மி
(கட்டாரில் இருந்து) **03 கவிதைகள்**

01.

உலாப்போகும் மேகம்....
கருமை இரவு
மூங்கில் காட்டின் மௌனம்....
வீசிப்போகும் காற்று
தனிமை முற்றம்.....
விரியாத மல்லிகை தோட்டம்...
இவைகளைத்தவிர...
நிலவெனும் கவிதையை எவருமே
ரசிப்பதில்லை...!

02.

இலைகளின் இடுக்கில்
காற்றென நுழைந்து
மலர்களின் மடியில் தென்றலென
தவழ்ந்து
புல்வெளிகள் யாவிலும் பனியென
படர்ந்து...
தொடுவானம்வரை பறவையென பறந்து
இயற்கையின் மடியில் நான்
வாழ்கிறேன்...
நானொரு ஈரக்கவிதை...!

03.

பறவையொன்று வந்து தங்கிப்போன
கிளையொன்றில்
தன்னந் தனியாய் மிஞ்சிக்கிடக்கும்
ஒற்றை இறகு பிரதிபலிக்கிறது...
பறந்துபோன பறவையின் வலிக்கின்ற
கனவுகளை...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விதியினால் வடியும் கண்ணீரை
துடைக்க கரங்கள் தேவையில்லை
கனத்த இதயம் போதும்...

முயென்றெழு மீண்டும்.!
வரங்கள் கிடைக்கின்ற நேரம்
பல கரங்கள் உனை சுற்றி இருக்கும்!
கண்களில்தான்
கண்ணீர் இருக்காது!.

**ஜமால்டீன் ஸாஜஹான்**
**ஒலுவில் -02 (கட்டாரில் இருந்து)**




ஆறு பிள்ளைகள் பெற்றும்
பாரம் குறையவில்லை
கருவில் சுமந்த பாரங்கள் -இப்போது
தலையில் சுமக்கவிட்டதுவோ.....!!!!

**மொஹமட் இஸாட்**
**ஒலுவில் -02 (கட்டாரில் இருந்து)**




முதலை விழுங்கிய
ஆடு ஒன்றின்
பிழுக்கை கிளறி
பகுப்பாய்வு நடக்கிறது ...
விழுங்கப்பட்டது
தெருநாயாகவோ
பாயும் புலியாகவோ
அல்லது
ஓடும் எலியாகவோ
இருக்கக்கூடும் என்னும்
ஊக மூட்டைகளும்
கிலோ கணக்கில்
அவிழ்த்து விடப்படுகிறது ...
நிறம்
இனம்
மதம் என்று
பற்பல தகவல்களும்
ஆட்டை இழந்தவன்
வாக்குமூலமாய்
பதியவும் படுகிறது ...
இறுதியாய்
தாகமெடுத்த
ஆடு குடித்து
குளம் வற்றி
முதலை
மூச்சு திணறி இறந்ததாய்
தீர்ப்பெழுதி
இடையன் கையில்
விலங்கும் மாட்டப்படுகிறது ....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு மௌனக்குமுறல்

எம் எஸ் றஸ்மியா
வரிபத்தான் சேனை

எங்களுக்கு ஒரு குறையும் இல்லை
நாங்கள்
சந்தோசமாக இருக்கிறோம்.

ஆடைகள் இல்லையென்று
குழந்தைகள் அழும்போது
ஒரு அடி கொடுப்போம்
வாங்கிக் கொண்டு ஓடி விடுவார்கள்.

நுழம்புகள் கடிக்குமென்று
எங்கள் சேலையை
குழந்தைகள் மீது போர்த்துவோம்
பூ அழிந்து
கறை படிந்து இத்துப்போன சேலைகள்
பழை துணிக்கடைகளில்
தாராழமான கிடைக்கிறது.

எங்கள் வீடுகளில்
எரிய விளக்கில்லை
என்ற கவலை
ஒருபோதும் எங்களுக்கிருந்ததில்லை
வானம் நிறைய நட்சத்திரமும்
வடிவாய் முழு நிலவும் ஒளிரும்போது.

மின் விசிறிக்காய் ஒருபோதும்
ஏங்கியதில்லை நாங்கள்
திறந்தவெளித் தென்றலின் சுகம்
கொடுப்பனையுள்ள எங்களுக்கே
சொந்தமாய்
இருக்கும்போது.

பசிக்குப் புசிக்க
எதுவும் கிடைக்காத போது
களிமண் உருண்டையை
வாயில்போட்டு
தண்ணீர் குடித்துக் கொள்வோம்
ஜீரணமாகிவிடும்

எங்களுக்கு ஒரு குறையும் இல்லை
நாங்கள்
சந்தோசமாக இருக்கிறோம்.

**மனிதனது கனவுகள் நனவாக வேண்டுமானால், முதலில் அவன் தூக்கத்திலிருந்து விழிக்க வேண்டும்.**

கலாநிதி ஆயில் அல் கர்ழானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜன்னலி(ல)ல் வசந்தம்!

உள்ளிழுத்து வெளிவரும் - என்
உஷ்ண மூச்சுக் காற்று
இதயத்தின் ரணங்களை
மொழிபெயர்க்கும்!

என் வீட்டு ஜன்னல் கதவு
என் மன ஓலத்தை எதிரொலிக்க
ஒத்தாசை புரியும்!


காயப்பட்ட என் நெஞ்சம்
வேதனை தாங்காமல்
விம்மித் துடிக்கும்!

நித்திரை வராத
நிலவுப் பொழுதுகளில்
கண்கள் மட்டும்
கண்ணீர் வடிக்கும்!

செத்துப் போன என் வாழ்வு
சில சொப்பனங்களால் மாத்திரம்
தினம் நகரும்!

யோசித்து வலிக்கும்
என் உணர்வுகள் - எப்போது
நிம்மதியை உணரும்?

கடந்து போன காலங்கள்
உயிரை உடைத்து
வலிகள் தரும்!
ஆனபோதும் நிச்சயமாய்
ஒருநாள் எனக்கு
வசந்தம் வரும்!!!



வெலிகம ரிம்ஸா முஹம்மத்

# முதியோர் இல்லம்



எச்.எம். றிஸ்னா

பிஞ்சுக் கால்கள்
நெஞ்சில் உதைக்க
சிரித்த அந்த
தந்தை முகம்..
இன்று
முதுமையில் சோகமாய்!

பத்து மாதங்கள் சுமந்து
போற்றி வளர்த்த அந்தத்
தாயின் குரல்
இன்று
இயலாமையில் தீனமாய்!

இத்தனைக்கும்
தவமிருந்து பெற்ற
தவப்புதல்வனோ
படித்து பட்டம் பெற்று
பெற்றோரை விரட்டினான்
வீட்டை விட்டு!

மனைவிக்கு அடிபணிந்து
காசுக்குள் மனம் குளித்து
ஏழைப் பெற்றாரை
அவமதித்தது
பிள்ளை மனம்!

ஆனால்
பிள்ளையின் நல்வாழ்வுக்காகவே
ஓயாமல் பிரார்த்திக்கும்
பெற்ற மனம்!

அமுதப்பால் கொடுத்து
அன்பு கொடுத்து
ஆடை கொடுத்து
அறிவு கொடுத்து
இன்றென்ன பயன்
பெற்றோர்க்கு?

முதியோர் இல்லங்கள் பல
முளைத்துவிட்டன
கருணை உள்ளங்களைக்
காணோம் என்பதால்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலையில் பூத்தமலர் சூரியனின்
சோதியினால்
மாலை வரையும் சிரிக்கிறது – சோலையில்
வண்ணமுடன் வாசம்வீ சித்தற்
புகழ்கொண்ட
எண்ணம் மண்ணில் சருகு.

கடலுக்குள் மீனென்று துள்ளிய தோறா
குடலுக்குள் சீரணமா கிற்றே – உடலுக்குள்
நின்றவுயிர் சென்றதெங்கே? இவ்வுண்மை
யாரறிவார்?
இன்றுவரை தேறவில்லை ஆய்ந்து.

காட்டினில் தேன்கூடு காவலுடன் தூங்கியது
வீட்டினில் நல்லசுவை தீர்ந்தாச்சு – மாட்டில்
கறந்தபால் உண்டவுடன் போனதெங்கே?
தென்னை
முறிந்ததால் போனதோ செத்து.

கூவிய சேவல் குழம்பாய் கொதிக்கிறது
ஆவிதான் எங்கே சென்றதுவோ? –
காவியங்கள்
இன்றும் அழியவில்லை அதை தந்தவர்கள்
என்றும் நிலைத்ததில்லை இங்கு.

பெய்த மழையெங்கே ஓடியது? மண்ணில்
செய்த வயற்பூமி காய்கிறது – கொய்தெடுத்துக்
கட்டிய பூமாலை ஏன்தான் வாடியது?
வெட்டிய பூமரம் விறகு.

கிள்ளும் வரைதானோ கீரை செழிக்கிறது
முள்ளும் ஒருநாளில் சாம்பலாகும் - அள்ளும்
புகழும் ஆவியாகிப் பின்மறையும்
மண்ணுலகில்
திகழும் அனைத்தும் மறையும்.

மலையும் இடிந்து மணலாகிப் போகிறது
அலையும் எழுந்து சுனாமியாகும் - கலையும்
கனவாம் நீர்க்குமிழி வாழ்க்கையில் என்ன
மனதில் விலகா அழுக்காறு.

களவும் கொலையும் அதிக பொய்யும்
அளவு கடந்து நடக்கிறது – வளவு
வேலிப் பொதுச்சண்டை நீதிமன்றில்
இன்னும்
கேலியாய்ப் போச்சு உலகு.

நிலையில்லாச் செல்வத்தில் நெஞ்சம் இழந்து
தலையுடைக்கும் சண்டை வேண்டாம் -
அலையின்
கரைவாழ்வு கொஞ்சம்தான் கண்ட இளமை
நரையுடன் காணும் முதுமை.

நேற்று இருந்தது இன்று மறைந்தது
காற்றுப்போ னால்காயம் - மாற்றமாகி
மண்ணில் மறையுமே சிந்தனை செய்தால்
கண்ணில் தெரிபவை மாயமே.

தீர்வின் ஒரு அங்கமாக இரு...


பிரச்சினையின் ஒரு அங்கமாக

இருந்து விடாதே...!

கலாநிதி தாரிக் சுலைமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கடன்களை அடைப்பவன்...



காலத்தை கட்டியிழுக்கும்
காரியம் சாமானியமல்ல
ஆயுள் நெடுகிலுமுள்ள
ஆப்புகளை கடந்து....
வயதின் இளமையை காட்டிலும்
மனதின் இளமைக்கு
வலிமை அதிகமிருப்பதால்தான்
இவர்களுக்கும் பூமி
இன்னும் சுற்றிக் கொண்டிருக்கிறது
புலம் பிரித்து மழை பெழிவதொன்றும்
பூமியின் திட்டமுமில்லை
வானத்தின் வஞ்சகமுமில்லை
மேகத்தின் சூழ்ச்சியன்றி
வேறொன்றாய்
இருக்கவும் வாய்ப்பில்லை......
வியர்வைகளை விற்பனை செய்யும்
ஏழையின் போரட்டத்தோடு
பஞ்சுமெத்தைக் காரனுக்கு
நின்று பிடிக்க முடியவதில்லை....
அதனால் தான்
தோற்றுப் போனதாக சொல்லிக்கொள்ள விடாத
வரட்டுக் கொல்லன்
அடித்து நொறுக்கி அவர்களை
ஆஸ்பத்திரிக் கட்டில்களில்
அடுக்கி வைத்திருக்கிறான்
மனமும் உடம்பும்
ஒருசேர சோர்ந்து போகாத வரம்
பாட்டாளி வர்க்கத்தின்
ஆயுட்கதால தனியுரிமை...

"ஏசி" மோகத்தால்
எழில் தொலைத்துவிட்டு
எஞ்சியிருக்கும் கூடுகளால்
எதை இனி செய்ய முடியும்
மருந்துக் கடைகளில்
விருந்து வீடுபேல
குவிந்து கிடப்பதை விடவும்
இது ஒன்றும் கஷ்டமில்லை...
பாட்டாளிகளுக்கு
கடைசிக் கவளமும்
வியர்வைச் சோறு
பணத்தாளிக்கு கடைசிவரையும்
மருந்தே சோறு....
பாதணியில்லாமல்கூட பணியாற்றும்
பக்குவத்திற்கு முன்னால்
பணக்கார பயணம் எம்மாத்திரம்....
ஓ.... வியர்வைத் தோழனே
உன் பயணத்திலிருக்கும்
பனிக்கடவைகளைக் கூட
தாண்டிவிட முடியாதவர்கள்தான்
இந்த குளிரூட்டி பொம்மைகள்....
உன்னை நம்பித்தான்
உலகம் கடன் படுகிறது என்பதால்
நீயொன்றும் இங்கே
ஏழையாகி விடவில்லை....
உன் கால்கள் அடையும் இலக்குகளை
எந்தக் கார்களும்
அடைந்து விடப் போவதில்லை....
சிலருக்கு பணம் கொடுத்து
பெறமுடியாதவைகளை
பணம் வாங்கி பெறுகிறாய்
நீ பாட்டாளியென்பதால்....
உலகப் பாதீடுகளெல்லாம்
உன் ஆற்றலால்தான்
இன்னும் உயிர்வாழ்கிறது....
வாழ்க வியர்வை வர்க்கம்...

நிந்தவூர் முஹம்மட் நாஷில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோஷான் ஏ.ஜிப்ரி.

# கண்களில் இறங்கிய மழை.



எண்ட வாப்பா
இது என்ன கூத்தப்பா
கூட்டாக துளிகள் சேர்ந்து
கும்மி அடிப்பதனால்
அம்மியும் நகர்ந்து
அள்ளுண்டு போகிறது
மாடியும் கசிகிறது
மண்சுவரோ இடிகிறது
கண்ட இடமெல்லாம்
காட்டாறு வெள்ளமப்பா

வீதிக்கு இறங்கவொண்ணா
விவசாயம் பாக்கவொண்ணா
கடலுக்கும் போகவொண்ணா
கறிமீனை நினைக்கவொண்ணா
தறியில் பாவோட
தடுக்கிறது குளிர்வேறு
பொறியில் அகப்பட்ட
பொழுதாக கழிகிறது

தக்காளி,மரக்கறிகள்
தங்கத்துக்கு ஈடாச்சு
காரத்தை சேர்த்து
கறி சமைப்போம் எண்டாக்கா
பழுதான கொச்சிக்காய்
விழுதாக விலை நீள
பச்சரிசி பவுசுகூடி-மனச
புழுங்க வச்சி வேகிறது
ஈர விறகுக்கும்
இரக்கமில்லை புகைகிறது

ஆறப்போட
அடுத்த பசி விரைகிறது

பிள்ளைகள் மேலுள்ள
பிரியத்தின் பால் சுரக்க
ஆடைகள் உலர்த்தவொண்ணா
அவலத்தை நினைந்துருகி
ஒவ்வொரு வீட்டினிலும்
இரு கண்ணில் மழையிறங்கி
கடலுக்கு போய்சேர
கால் வாய்க்காய் காத்திருக்கு
வெயிலே விரையப்பா-இவர்கள்
வேதனையை குறையப்பா.

"மற்றவர்களது வாழ்வை எப்படி இடித்துவிடலாம் என்று யோசிப்பதை விட, உனது வாழ்வை தொடர்ந்து எப்படி கட்டியெழுப்பலாம் என்ற யோசி..." கலாநிதி ஸல்மான் அல் அவ்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலைகளிட்ட சாபம்

பாட்டன் முப்பாட்டன்
காலத்தில் துளிர்விட்ட
முற்றத்து மாமரம் நான்.

வானளாவ உயர்ந்த
என் கிளைகளின் அழகில்
விழிகள் வியக்கும்.

வெயிலுக்கு ஒதுங்கி
என் நிழலில் குளிர்ந்த
பாதங்கள் பலகோடி.

வண்டுகளும் வண்ணாத்திகளும்
என் அலங்காரங்கள்
தென்றல் என் நண்பன்.
நாட்டுக் கொய்யாவும்
வீட்டுப் பலாவும்
என் அயலவர்கள்.

குறைவில்லா மகிழ்ச்சி
நிறைவான வாழ்க்கை
சமநிலை பெற்ற இயற்கை.

அன்றுதான் என் சந்தோசத்தின்
இறுதி நாள்...
சரிகிறது கொய்யா
அதிர்ச்சியில் பார்க்கிறேன்
அதை வெட்டிச் சாய்ப்பது
அந்த வீட்டு மனிதர்களே!

கணப்பொழுதில் யாவும் நடக்க
கொய்யா இருந்த இடத்தில்
மாடி கட்டும் தூண்!

ஆங்காங்கே கொலைகள்
உற்றாரை இழந்தேன்
உறவினரை இழந்தேன்
நண்பர்களை இழந்தேன்.
எங்கள் குலம் தழைக்க
உதவிய தண்ணீர் இன்று
கானலானது.
எங்கள் உறவுகளுக்கு
தூது போன குளிர் தென்றல்
இன்று அனலானது.
ஐந்தறிவு ஜீவன்கள்
ஊருக்குள் படையெடுக்கிறது
காட்டையும் காணாவில்லையாம்

பாவமறியாத எங்களை
சூரியன் தன் கோபக்
கனல்களால் சுட்டெரிக்கிறான்.

எங்களால் நடமாட முடியாது
என்பதனால் உயிர் இல்லை
என்றெண்ணினார்களா?
பேச வாயில்லை
என்பதால் உணர்வில்லை
என்றெண்ணினார்களா?





அந்தோ என்னையும் நோக்கி
ஒரு கூட்டம் வருகிறது
கத்தியோடும் கச்சையோடும்

பறவைகளே உங்கள்
குஞ்சுகளை அப்புறப்படுத்துங்கள்
என்காலம் முடியப்போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரமாய் தப்பித்துக்
கொள்ளுங்கள் சற்று
நேரத்தில் சரியப் போகிறேன்.
மனிதர்களே
இறுதியாய ஒன்றை சொல்லிக் கொள்கிறேன்...
கை நிறைய செல்வம் இருக்கும்
ஆனால் வறுமையின்
கொடுமையை நீங்கள் உணர்வீர்கள்
உங்கள் உள்மனம் சொல்லும்
இலைகளிட்ட சாபத்தால்
உலைகளுக்கு வந்த வறுமையிதுவென்று...

## ஏழைக்கு நீதியில்லை...



இல்லார்க்கு இடமில்லை
இவ்விகத்தில் - கொடும்
பொல்லார்க்கும் பணமிருக்க
புகழ்ச்சி வரும் பூமியிலே.

கண்ணியம் கிடைப்பதில்லை
கற்றோர்க்கு – வெறும்
தண்ணீரும் ஈயார்க்கு
தகுதிவரும் தனமிருக்கத் தரணியிலே.


வாய்மைக்கு உயர்வில்லை
வறியோர்க்கு – பெரும்
பொய்யர்க்கும் பொன்னிருக்க
மெய்யனவே தகுதி பெறும்.

எங்கெங்கும் நீதியில்லை
ஏழைக்கு – கொடும்
பங்கம் புரிவோர்க்கும் பொருளிருக்க
பக்குவமாய் நீதி வரும் பாரினிலே.

- ஜனதா லத்தீப் -

## தாய்ப் பாசம்

- சின்னப் பாலமுனை முஹா -



மாங்காய்க்கு எறிந்த கல்
தலையில் பட்டு
உயிரை விட்டு விழுகிறது அணில்!

முகம் குப்புற
"தொப்"பென விழுந்து
இரண்டொரு தடவை கால்களடித்து
அது
சாவை அழைத்துக்கொண்டபோது
வாழ்வை முடித்துக் கிடக்கிறது
என் இதயம்!

நான் பக்கத்திலிருக்கும்போதே
அம்மாவைக் கேட்டழுகிறாள்
சின்ன மகள்
பாவம் !


அந்த அணிலின் குஞ்சுகள்
எந்தக் கூட்டுக்குள்
ஆதரவின்றிக் கிடக்கிறதோ
என் கல்பைக் குடைகிறது.

இனி
என் மகள்
அம்மாவை அழைக்கும்போதெல்லாம்
அணில்தான்
என்னை ஆட்சிசெய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லன்பன் நஸீறுதீன்

# அகப்பகண வெளயாட்டு



மாத்தம் எங்குறதில
மாத்தமே இல்லகா
மாத்தியே காட்டினாக
மாத்தயா ஓடினாராம்.

ராஜாவாக்குறதும்
கூஜா தூக்க வெக்கிறதும்
என்ர வேலெண்டு
படைச்சவன் சொல்லிபுட்டான்.

இன்னம் ரெண்டு வரிசம்
செல்லப்புள்ளயா இரிக்கிறத
உட்டுப்புட்டு
சாஸ்த்திரகாரண்ட
கதய கேட்டா
சந்தி சிரிக்காம என்ன செய்யும்?

இந்தமொற கதிரல குந்தினா
இனி எந்தக் காலத்திலயும்
ஆரும் குந்தேலாதாம்
அப்பிடி பொரட்டி வெரட்டி
அவர்ர பாட்டுக்கு
மாத்தி மாத்தி எழுதிரிக்காம்
நல்ல காலம்தான்

மஞ்சப் பொடவைக்க
ஒளிச்சிக்கிட்டு
வஞ்சம் தீத்த சொந்தக்காராங்கள்
காவக் காராங்களும்
கண்டுக்கலயாம்
ராசாட வாயும்
தொறக்கலயாம்.

முன்னய ராசாத்திர
அகப்பகண வெளயாட்டுல
ஆடிப்போனாரு ராசா
போறகால நிண்டு
கருவருக்கத் தொடங்கிற்றாள்
குழு வித்தக்காரி ரோசா.

துப்பரவா திண்ட
ஹலால பறிச்சி
துப்பில்லாதவகளுக்கு
குடுத்தா
தப்பில்லாததெண்டு
ஹறாத்த தாறாக
வக்கில்லாதவுக.

கண்ண மூடி கால் மடிச்ச
ஞானிமார்கள்
பொழுக்கடயெல்லாம்
புதிசி புதிசா மௌச்சி
காவலுக்கு வந்திரிக்காக.

மண்ணாச புடிச்ச
ரெண்டு சண்டியனுகளும்
என்னாகிப் போனாங்க
முந்தானய ஏந்தினா
சும்மாவா சொன்னாங்க
மண்ணாகிப் போனாங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசிரொண்டு போகுதே.........!



வயல் பூமி மத்தியில
வரம்பு ஏறி நடக்கையில
இரவெல்லாம் பொழிஞ்ச மழ
இதமாக குளிரயில
காத்தோட கலந்து வந்து
களி நிலமும் மணக்குதம்மா...!
கண்பார்த்த காட்சியெல்லாம்
நரம்பெல்லாம் ஊடுருவ
நஞ்சு பட்ட மரம் போல
நரம்பறுந்து நிக்கிறேனே...!

தலைப்பாரம் கைகள் தாங்க
கைகள் இரண்டையும் கால்கள் தாங்க
கண்ணீர் சுமந்து கண்கள் ஏங்க
கைவிட்டு கதிகலங்கி கிடக்குறேனே...!

முள்ளி மல பக்கத்துல
குடிசையோட பத்து நிலம்
பசுமையாத்தான் வெளஞ்சி நிற்கும்
பாக்க பாக்க நெஞ்சு சொக்கும்
ஏர் பூட்டி நானும்
எடுத்த வழி ஒழவினாலும்
ஏமாத்தாம என் தங்கம்
எவ்வளவோ தந்துருச்சி...!

பொம்பளபுள்ள பெத்துட்டன்னு
பொலம்பி நான் அழுததில்ல
எம்மண்ணோட உதவியால
படிப்போட சேர்த்து
பண்பாத்தான் வளத்துவிட்டேன்
ஒரு குறையும் வச்சதில்ல..!

எம் பொண்ணுக்கு நான்
கல்யாணம் பண்ணிட்டேனே....!
என் தங்கம்...
உனக்கு நான் துரோகம்
பண்ணிட்டேனே...!

சீதனத்த கேட்டு
என் வேதனத்த பறிச்சிட்டாங்க...!
சாதகமா எடுத்து சோதனைய
தந்துட்டாங்க...!
சிறப்பாத்தான் வைப்போம்னு
எம் பொண்ணையும்
எடுத்துக்கிட்டாங்க...!

எம் மண்ண வித்து பொன்னாக்கி
எம் பொண்ண நானும்
வாழ வச்சேன்
சத்தியமா என்தங்கம்...!
மனசாற உன்ன கொடுக்கலையே...!

உள் நெஞ்சு வலிக்க
உசிரொண்டு போகுதே...!
உலகமெல்லாம் தேடினாலும்
உன்னப்போல ஒரு உசிரு
கிடைக்குமா...? என் தங்கம்..!

ஒலுவில் எஸ்.சிபானி முஹம்மட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜலச்சண்டை!



இடுப்புக்குமேல புடிச்ச தண்ணி
துடுப்புக்கு பதிலா
அவன் கையிலொரு வலைக் கண்ணி
சுழிபோட்டு ஓடும் வெள்ளம்
நுரைக்குள்ளாலே மீன்கள் துள்ளும்!
கலங்கித்தான் ஓடும்போது
தெளிதண்ணி ஆற்றிலேது
துலங்காத மீன்கள் கண்டு
துல்லியமா வீசவென்று
புறப்படுவான் உதுமாங்கண்டு
பன்பறியை உடுத்திக்கொண்டு !
எட்டுமுழ வலை எடுத்து
எட்டாத இடம் பார்த்து
வட்டமா எறிவதனை
கிட்ட நின்று பார்த்தா
கிறுகிறுக்கும் உங்களுக்கு
வேறு யாருக்கும் இந்த கலை வராது!
வட்டமா விரிஞ்சவலை
நிலத்தில பட்டவுடன்
மாட்டின மீனெல்லாம் தப்பியோட
வழிதேடி வட்டம்போடும்
வலைகுள்ளே கிழிஞ்ச கண்தேடும்!
வலக்கண்ணில் முட்டிவிட்டு
மோட்டுவலை ஏறி முறித்தோடப்பார்க்கும்
கண்பெருத்த கைமீனு
செதில் பளபளன்னு மின்னும் நீ பாரு !
பொட்டியான் குஞ்செல்லாம்
போட்டிபோட்டு தெறித்தோடும்
மாட்டிக்கொண்ட மேல்முள்ளை
களட்டப்போராடும் நீள்மீசைக் கெழுத்திமீனு !
கொழுவலில் வலை விழுந்தால்
கிழிகின்ற ஒலிகேட்கும்
குப்பையில் வலை மாட்ட
கூளனெல்லாம் அள்ளி வரும்!
சள்ளல் மாட்டிக்கிட்டா
சர்ரென்று வலைபேசும்
செல்வன் பட்டதென்றால்
துள்ளி அடங்கிவிடும்
வலை தூக்கும்போது துடிப்பெடுக்கும்!

**மு.இ.உமர் அலி**



நடுவலையை நறும்பிக்கிட்டு
வழி எடுத்து ஓடிவிடும்
கொம்புடைய கொடுவா மீன்
அழிக்குள்ள அகப்பட்டு
அசைவின்றிப்படுக்கும் சிலமீன்கள்!
விரால் கண்டு அகப்பட்டா
வலை சுண்டும்
வலைமுழுக்க தடதடக்கும்
விலாங்கு வீசப்பட்டா
அடிவலையில் நழுநழுக்கும்!
கனத்த மீன் கிடந்தா
கைக்கயிறை தொய்யவிட்டு
மீனையெல்லாம் களைக்க வைப்பான்
கரையோரச் செம்படவன்!
ஒற்றைவீச்சில் ஒருகறிக்கு மீன்கிடைக்கும்
சில வேளை
பத்துமுறை வீசினாலும் மணத்திற்கும் மீன்
கிடையா
வலையில் ஒரு மீன் பிணமும் அணையா !
அடிப்பறியில் மீனிருந்தால்
வீட்டிலன்று நல்ல கறி
முழுப்பறியும் நிறைந்ததென்றால்
இன்னும் பிடிப்போமென்று
மனதில் வரும் வெறி!
கைகடுக்க வலைவீசி
கால்கடுக்க தனக்குள்ளே கதைபேசி
கஷ்டப்பட்டு பிடித்தமீனை
கண்கெட்ட விலைக்கு
கேட்டிடுவான்
ஐஸ்பெட்டி வியாவாரி
கொண்டுபோய் எங்கோ
அறா விலைக்கு விற்பதற்கு!
ஈயப்பாரத்தை வெல்லும்
ஈரமான செம்படவன் மனப்பாரம்
மீன்பிடி முடிந்ததென்றால்
வலை காயும் அவன் வாசலிலே
மனம் நொந்து வேகும்
வீட்டு வறுமையின் பூசலிலே!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உன் காலடி மண்ணை தேடுகிறேன்

எச்.எம். அன்வர்

தாலாட்டுப் பாடி
தூங்கவைத்த உன்னை
தள்ளாடும் வயதில்
ஓடவிட்டேன்...

உனக்குள்தானே
இருந்து வந்தேன்
எனக்குள் எப்படி
இந்த வேண்டாத குணம்?

உன்னை செதுக்கி
எனக்கு உருவம் தந்தாய்
என்னால் நீயோ
இன்று சிதைந்து போனாய்...

பல்லாயிரம் தடவை
எனக்காய் நீ யோசித்திருப்பாய்
ஒரு நொடியேனும்
உனக்காய் நான்
யோசித்திருப்பேனா?

புது உறவுக்கு
புத்துயிர் கொடுத்த என்னால்
ஏன் தாய்மை என்ற
தலைமுறை உறவுக்கு
தலை வணங்க முடியாமல் போயிற்று???

அவமானம்
அடிமைத்தனத்துக்கு
விடுதலை கொடுத்த
நாகரீகம் கற்றுத்தந்த
வேதத்தையுடையவன் நான்
தாய்மைக்கு
அடிமைக்கோலம் கொடுத்திருக்கிறேன்...

உன் குழந்தைக்காய்
நீ கொடுத்த
அன்பு முத்தங்கள்
என் இதயத்தில்
இரும்புப் பூட்டிட்டு
பூட்டி வைத்துவிட்டேன்.

உன் கனவுகளெல்லாம்
என் வாழ்வு
சுபிட்சமாக வேண்டும்
என்றிருந்தது ஆனால்
என் கனவுகளெல்லாம்
என்று ஒழியும்
உன் தொல்லை என்றிருந்தது.

உன் மனிதாபிமான
கருவறையில்
பத்து மாதம் நான் கற்ற
பாடமெல்லாம்
பல்கலைக் கழக பட்டங்களால்
மறக்கடிக்கப்பட்டுப் போனதெனக்கு...

இன்று கைசேதத்தை
சம்பாதித்தவனாக
உன் காலடி மண்ணை
தேடுகிறேன்
மறைக்கப்பட்ட
என் சொர்கத்தின் வாசலைக்
கண்டு கொள்வதற்காக....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலையில் செய்தி கொண்டு வந்த காற்று

- கவிஞர் அஸீஸ் எம் பாயிஸ் -

காற்று வழி செய்தியென்றில்
கலங்கிக் போனது கண்கள்
பூட்டி வைத்த நெஞ்சுடைந்து
புதுக்காயம் கொண்டது
நேற்றய புண்கள்.

அன்புக்குள் உறைந்த நெஞ்சம்
வேதனை அம்புக்குள் திணறியது.
நிலவரம் சொல்லத் தெரியாமல்
கலவரம் கொண்டது மனசு.

அருகினில் இருந்த இதயம்
அழுது புரண்டது
ஆறுதல் சொல்ல முடியாமல்
ஆணியில் அறையப்பட்டதென்
மொழிகள்.

ஆலாவும் நரியும்
பயிர் செய்த கதையில்
தண்ணீர் ஊற்றிய ஆலாவின்
பயிர்கள் அழிந்து
சிறுநீர் ஊற்றிய நரியின் பயிர்கள்
பொலிந்து வளர்ந்த கதையில்
நீதம் சொல்வதற்கு யாரை
அழைப்பது...?
அழுகின்ற ஆலாப் பறவைக்கு
ஆறுதல் மொழிகள் தேடுவதெங்கே...?

நரியின் பயிர் வளர்ந்ததில்
ஆலாவுக்கொன்றும்
ஆற்றாமையில்லைதான்
இருந்தாலும்
கண்கள் கலங்க காரணம்
போதும்தானே...

ஏர்பிடித் நிலமுழுது
ஏத்திழுத்து நீரிறைத்து
நாத்து நட்டு
நால் திசையும் நாளிகையெல்லாம்
காவல் செய்து
பாத்திருந்தும்
பயிர்விளையல என்ற போது
பரிதவிக்கும் ஆலாவின் நெஞ்சம்
அழுட்டும்

அழுது அழுது அதன் விழிகள்
ஒளியிழந்து கண்கள் குருடாகட்டும்
கடவுளின் நியதியில் அநீதி
இல்லாவிட்டாலும்
அவன் கருணையின் நீதியில் என்றும்
குறையிருக்காது
காலையில் செய்தி கொண்டு வந்த காற்று
இந்த சேதியையும்
கடவுளின் காலடிக்கு சேர்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவ(வி)ச் சுமை



ஒருமுறை சிரித்தால் போதும்
ஒவ்வொரு வேளையும்
அழுது கொள்கிறேன்

இனி எங்கு ஓய்வெடுப்பது
என் இறக்கைகளில்
கந்தக துகள்களைப் பரத்தி
தீக்குச்சிகள் உலர்கின்றன

திரும்பும் திசை எல்லாம்
தீண்டும் பாவத்து அரவம்
என் அசைவுகளில் நெழிகிறது

ஈமான்ய வேர்களை
அரி(று)க்கும் மெல்லிய வாள்
கண்களுக்குள்ளேயே தீட்டப்பட்டு
வண்மமாகிறது

மிக மெல்லியதனால் ஆன
கூந்தலைப் போல் - அதன்
நுனியினைக் கூராக்கி
நரம்பெங்கும் நுழைகிறது தீமை


நான் சுவனத்து கதவுகளுக்காக ஓட
சொப்பனத்து தொட்டில்களிலும்
சைத்தானிய ஊஞ்சல்கள்

இனி நான் எப்படிப் பறப்பது
இறக்கைகளில் கந்தகம் சுமந்து

**-கிராமத்தான் கலீபா-**
**பொத்துவில்.**

## பயணம்

- பைசல் அகமட் - பொத்துவில் -



நிழலை வெளியே வைத்துவிட்டு
கடைக்குள்ளே போய்விட்டேன்.
திரும்பி வரும்போது
மழையில் நனைந்தபடி நின்றது.

ஊர் வந்ததும் பஸ்ஸைவிட்டு இறங்கினேன்
எனக்குப் பின்னால் என் நிழலையும்
இறக்கிவிட்டான் கன்டெக்டர்.


வீட்டுக்குப் போகும் வழியில் இருக்கும்
மரத்திற்கு மறைந்தது என் நிழல்
வீட்டுக்குள் நுழைந்ததும்
என் நிழல் எங்கே என்று யாரும் கேட்கவில்லை

மழையில் நனைந்தபடி நிற்கும் என்னை
தனது குடைக்குள் அழைத்துச் செல்கிறாள்
அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றும் ஒரு ஆங்கிலப் புது வருடம்

நிந்தவூர் - ஏ.எச்.அஸ்வர்தீன்



அதிகாலைப் பனியில்
அதிக வனப்புடன்
என் வீட்டு முற்றத்தில்
இரவு மரலந்த மல்லிகை
மணம் வீசி சிரித்தது.

என் காலை வருடும்
என் வீட்டு
ஆஸ்திரேலிய புல்லினம்
தன்னில் நிறைந்த
பனித்துளிகளை
பகிர்ந்து கொள்வதில்
நெகிழ்ச்சியடைகிறது.

பனியிடும் பணியினை முடித்து
மேகக் கூட்டங்கள்
ஓய்வெடுத்துக் கொண்டிருநதது வானில்

சூரியனோ
பனித்துளிகளை விலக்கும் வேகத்தில்
தன் கதிர்களை
அள்ளி வீசிக் கொண்டிருந்தான்

ஓவென்று அழுதவண்ணம்
தன் துயிலை கெடுத்த என்னை
ஆத்திரத்தோடு நோக்கிய
என் வீட்டு கூலியில்லா காவலன்...

பன் தொப்பியுடன்
தன் வயிற்றுப் பிழைப்புக்காய்
கடலை நோக்கி விரையும்
கடல் தொழிலாளி
அவனை முந்திக் கொண்டு
வெள்ளத்தால் விடுபட்டுப் போன
நெல் வயலை நோக்கி ஓடும்
வேளாண்மை தொழிலாளி

இத்தனைக்குள்ளும்
தத்தி தடவியபடி என் காலைக் கடன்களை
முடித்து கடமைக்கு
தயாராகும் நான்

எனக்காய் திறந்து கொண்ட
பின் கதவினூடே
காரியாலயம் அடைந்தேன்
என்னைவிட சுறுசுறுப்பாய்
காரியாலயம் இயங்கியது...

அப்போதுதான்
புரிந்தது
இன்றும் ஒரு ஆங்கிலப் புதுவருடம் என்பது.

"வாழ்க்கை என்பது ஒரு கஷ்டமான
பரீட்சை. அதில் அதிகமானோர்
சித்தியடைவதில்லை. காரணம்,
மற்றவர்களது விடைத்தாளைப்
பார்த்து கேள்விகளுக்கு
விடையளிக்க முயற்சிக்கின்றனர்.
பரீட்சையில் ஒவ்வொருவருக்குமான
கேள்விகள் வித்தியாசமானவை
என்பதை மறந்துவிட்டனர்"

**கலாநிதி பிலால் பிலிப்ஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவோவியம்...

- க. டனிஸ்கரன் -

என்னைச் சுருட்டி
எனக்குள் நானானது சிறு
புழு.

அச்சிறு புழுவுக்கு
இரையாக
என்னைக் கொடுத்தேன்.
இரவையும், பகலையும்
பழகிடக் கொடுத்தேன்.

சிறகு முளைத்த புழு
பலவண்ணம் போத்திப்
பறக்கின்றது.



இப்போது
என்னைத்
தேடுகின்றேன்....

சுருட்டப்பட்டவனை
காற்று திறக்கின்றது.

எண்ணற்ற துளைகள்
என்னில்

ஒவ்வொரு துளையிலும்
ஓராயிரம் நினைவுகளை
ஓவியமாக்கியிருக்கின்றது
புழு

# மனது பொறுக்கல...



பெத்து வளர்த்த பிள்ளையையும்,
செத்து சேர்த்த சொத்துக்களையும்,
கொடுத்து விட்டு
கடைசியில்
கஞ்சிக்கு கையேந்த
வைக்கின்ற கயவர்களையும்,

மாற்றானின் வியர்வையை
குடிக்கிற அசிங்கங்களையும்,
இனியாவது மனிதர்களென
அழைக்க வேண்டாம்


இந்த சீதனப்
பூச்சிகளை எல்லாம்
இதயம் அறுத்து
குருதி நனைத்து
கொடூரமாய்
கொல்ல வேண்டும்

பிண்டங்களை கூட
அண்டங்கள் தாண்டிதான்
வீச வேண்டும்

இவர்கள் வாசங்கள்
கூட இன்னொருவரின்
சுவாசதில்
கலந்திடாமல் இருக்க...

க.லெ.முஹம்மது சுதீர்
ஒலுவில் (தென் கொரியாவிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்புடன் உங்களுடன்,

மிக நீண்ட இடைவெளிக்குப் பின் கீறல் சஞ்சிகையானது தனது இலக்கியப் பயணத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளது. கடந்த காலங்களைப் போல் ஒரு கனமான, தரமான இலக்கிய இதழாக எதிர் வரும் காலங்களிலும் கீறலை நீங்கள் எதிர்பார்க்கலாம்.

வளர்ந்து வரும் இளம் படைப்பாளிகளுக்கும் களம்தர கீறல் காத்திருக்கின்றது. எனவே தைரியமாக எழுதுங்கள்

காயம் வரக் கீறத்தெரிந்த அனைவரும் எங்களோடு கைகோர்க்கலாம்.

பிரதம ஆசிரியர்

தொடர்புகளுக்கு:- **0776619949** , faiz281078@gmail.com

Minnal Publication: Regd. No. கிமா/பண்/கஅ/அம்/அட்/த/16/09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org